அம்பத்துார்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 304/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 18.11.2025 |
| பெயர் சுந்தரி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு  விசாரணை தொடர்ச்சி</u>:–

1. 2ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு நான சூரிட்டியாக இருந்துள்ளதால் வங்கி தரப்பில் இருந்து  என்னிடம் கடன் சம்மந்தமாக எதுவும் கேட்டுள்ளார்களா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி தரப்பில் கடன் சம்மந்தமாக அனைத்து தொகையும் செலுத்திவிட்டதால்தான் எனக்கு எந்த தொந்தரவும் வங்கிமூலம் வரவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பிரதிமாதம் எவ்வளவு கடன்தொகை கட்டினார் என்றால் மாதம் கணக்கு தெரியாது. ரூ5லட்சத்திற்கு லோன் போடப்பட்டது. எனவே யார்கட்டியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது மாமியார் தான் ஒவ்வொறு மாதமும் ரூ8 ஆயிரம் கடன் செலுத்தினார். அந்த ரூ8000 தொகை என்னிடம் எனது மாமியார் கொடுத்தார்களா என்றால்

இல்லை 2ம் பிரதிவாதியிடம் கொடுப்பார்.

2. தாவா சொத்து எனது மாமியார் சொத்துதான். ஒருவீட்டின் உரிமையாளருக்கு என்ன உரிமை இருக்குமோ அது என் மாமியாருக்கு உள்ளது என்றால் சரிதான். எனக்கு வீட்டை கொடுத்துவிட்டார். எனவே என்னை தொந்தரவு செய்யாமல் இருக்கும் நிலை வேண்டும். அந்த சொத்து பொருத்து அடமானம் வாடகை விடுவதற்கு எனது மாமியாருக்கு உரிமை உள்ளது என்றால் நான் அதை செய்யவிடமாட்டேன். நான் 2003 வருடத்தில் மீண்டும் தாவா சொத்திற்கு வந்தபோது எனது மாமியார் என்னை தடுத்தார்களா என்றால் நான் 2004 பிப்ரவரியில் தாவா சொத்திற்கு மீண்டும் வந்தேன் அப்போது என்மாமியார் தடுக்கவில்லை. 2ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் நான் இன்றைய தேதிவரை ஒரே பள்ளியில் தான் வேலைசெய்கிறோம் என்றால் சரிதான்.

3. 2ம் பிரதிவாதியின் மனைவி விட நான் வேலையில் மூத்தவர் என்றால் சரிதான். அவருக்கு என்னைவிட அதிகமான சம்பளம் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி 2014 வருடத்தில் என்மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றாலும் சரியான நீதிமன்றகட்டணம் கட்டாததால் வழக்கு தள்ளுபடி ஆனது என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு போதிய வருமானம் இல்லாததால் தான் வழக்கு கட்டணம் செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. அவர் 3 பென்சன் பணம் பெற்றுவருகிறார். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து இல்லை என்றால் சரியல்ல.

4. 2018– 2019 இறுதியில் தாவா சொத்தில் எனது குடும்பத்துடன் எனது மாமியார் மற்றும் பிரதிவாதிகள் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் என்கணவர் மற்றும் குழந்தை மட்டும் தான் உள்ளோம். சொத்து

குறித்து வாய்மொழியாக பிரித்துக்கொண்டபோது அந்த விவரம் என் கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவர் சாட்சியம் அளிக்க வருவாரா என்றால் வரமாட்டார். எனக்கு 08.02.2002 அன்று திருமணம் ஆனது. எனது கணவர் மற்றும் அவரது தந்தை சேர்ந்து 1998 வருடத்தில் சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அப்போது கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எனது கணவருக்கு 1வயது இருக்கும்போதே எனது மாமனார் இறந்துவிட்டார்.

5. 1ம் பிரதிவாதி அவரது சம்பாதியத்தில் தாவா சொத்தை கிரையம் பெற்றதால் 1ம் பிரதிவாதிக்கு தான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனது மாமியாருக்கு உரிமை உள்ள இடத்தில் அவரை வெளியேற்றிவிட்டு நான் சொந்தம் கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சொத்துவரி எனது மாமியார் தான் செலுத்தி வருகிறார். நான் வீட்டை பராமரித்துவருகிறேன். நான் ஏன் கட்டவில்லை என்றால் எனது மாமியார் கட்டிவிடுவதால் நாங்கள் வரிகட்டவில்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.